செ.வெ.எண்.71 நாள்.27.09.2017.

திருநெல்வேலி மாவட்டம், திருவேங்கடம் பேரூராட்சியில் சங்கரன்கோவில்–பிஎஸ்ஆர் கல்லூரிக்கு புதிய வழித்தட பேருந்தினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

---

திருநெல்வேலி மாவட்டம், திருவேங்கடம் பேரூராட்சி மெயின் பஜாரில் சங்கரன்கோவில்–பிஎஸ்ஆர் கல்லூரிக்கு புதிய வழித்தட பேருந்து தொடக்க நிகழ்ச்சி இன்று (27.09.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு, புதிய வழித்தட பேருந்தினை கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

புதிய பேருந்து தினசரி காலை 7.30 மணிக்கும், மாலை 3.10 மணிக்கும் சங்கரன்கோவிலிருந்து புறப்பட்டு கழுகுமலை, நான்குவாசல்கோட்டை, குருவிகுளம், திருவேங்கடம் வழியாக பிஎஸ்ஆர் கல்லூரிக்கு காலை 8.50 மணிக்கும், மாலை 4.10 மணிக்கும் சென்று திரும்பும். இதனை பொதுமக்களும் கல்லூரி மாணவ, மாணவிகளும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி மண்டல பொதுமேலாளர் திரு.குமார், அண்ணா தொழிற்சங்க மண்டல செயலாளர்கள் (திருநெல்வேலி) திரு.கந்தசாமிபாண்டியன், (தூத்துக்குடி) திரு.பொன்னுராஜ், மண்டல துணை செயலாளர் திரு.பி.ஆறுமுகம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக சங்கரன்கோவில் கிளை மேலாளர் திரு.எம்.பாலசுப்பிரமணியன், தமிழ்நாடு மாநில கூட்டுறவு இணைய துணைத் தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜூ, திருவேங்கடம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.கலாராணி, முக்கிய பிரமுகர்கள் திரு.எம்.ஆர்.அருணாசலம், திரு.சி.சக்திவேல், திரு.சண்முகராஜ், திரு.வாசுதேவன் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.